**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 98** **நாள் : 14.02.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சியின் சென்னை பள்ளிகளைச் சார்ந்த தூய்மை மேலாண்மைக் குழு ஒருங்கிணைப்பாளர்களுக்கான திடக்கழிவு மேலாண்மை குறித்த புத்தாக்கப் பயிற்சி இன்று நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலங்கள் 1 முதல் 15 வரையுள்ள 211 சென்னை பள்ளிகளைச் சார்ந்த தூய்மை மேலாண்மைக் குழு ஒருங்கிணைப்பாளர்களுக்கான திடக்கழிவு மேலாண்மை குறித்த புத்தாக்கப் பயிற்சி இன்று (14.02.2026) ரிப்பன் கட்டட வளாக கூட்டரங்கில் நடைபெற்றது.

இந்தப் பயிற்சி வகுப்பில் மக்கும், மக்காத மற்றும் இதர குப்பைகள் போன்றவற்றை எவ்வாறு தரம் பிரித்து வழங்குவது, பள்ளிகளில் உள்ள சுற்றுப்புறத்தை எவ்வாறு தூய்மையாக வைத்திருப்பது, கழிப்பறைகளின் சுகாதாரம் மற்றும் தூய்மை மேலாண்மைக் குழுக்களின் செயல்பாடுகள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், பள்ளிகளில் உள்ள தூய்மை மேலாண்மைக் குழு ஒவ்வொரு மாதத்தின் மூன்றாவது புதன் கிழமை அன்று மாணவர்களுக்கு மேலாண்மைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தி நிகழ்ச்சிகள் நடத்திடவும், வாரம்தோறும் புதன்கிழமைகளில் கடைசி கால வகுப்பில் திடக்கழிவு மேலாண்மை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி வகுப்புகள் நடத்திடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது,

இப்பயிற்சி வகுப்பில் தலைமைப் பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மை) திரு.சி.ஏ.பாலமுரளி, மேற்பார்வை பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மை) திரு.பி.வி.சீனிவாசன், கல்வி அலுவலர் திருமதி ஜெ.வசந்தி, சுகாதாரக் கல்வி அலுவலர் முனைவர் டி.ஜி.சீனிவாசன், திடக்கழிவு மேலாண்மை துறையைச் சார்ந்த செயற்பொறியாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள், அலுவலர்கள் மற்றும் தூய்மை மேலாண்மைக் குழு ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**